குறுந்தொகை

பேரா. முனைவர் த. டான் ஸ்டோனி

தமிழ்த்துறை

இலயோலா கல்லூரி, சென்னை

Prof.donstony@gmail.com - 9944911404

பாடப்பகுதி – 5 பாடல்கள் (03,23,27,40,196)

குறுந்தொகை - 1

- மலைப் பக்கத்தில் உள்ள கரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு பெரிய தேனை வண்டுகள் செய்தற்கு இடமாகிய நாட்டைஉடைய தலைவனோடு யான் செய்த நட்பானது
- பூமியைக் காட்டிலும் அகலம் உடையது; ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழம் உடையது.

குறுந்தொகை -2

- தெய்வங்களை அழைத்துப் பாடுதலைச் செய்யும் கட்டுவிச்சியே
- சங்கு மணியினால் ஆகிய கோவையைப் போன்ற வெண்மையாகிய நல்ல நீண்ட கூந்தலை உடைய பாட்டுக்களைப் பாடுவாயாக;
- இன்னும் பாட்டுப் பாடுக! நீ பாடிய பாட்டுக்களுள் அவருடைய நல்ல நெடிய குன்றத்தைப் புகழ்ந்து பாடிய பாட்டை மீண்டும் பாடுவாயாக.

குறுந்தொகை - 3

- நல்ல பசுவின் இனிய பாலானது அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல் கறக்கும் பாத்திரத்திலும் விழாமல் தரையில் சிந்தி வீணானது போல
- எனது மாமையாகிய பேரழகை எனக்கு அழகு பயந்து நிற்பதாகாமலும்
- என் தலைவனுக்கு இன்பம் பயவாமலும் பசலையானது தான் உண்ண விரும்பா நிற்கும்.

குறுந்தொகை - 4

- என்னுடைய தாயும் நின் தாயும் ஒருவருக்கொருவர் எத்தகைய உறவின் முறையினராவர்?
- என் தந்தையும் நின் தந்தையும் எந்த முறையில் உறவினர்?
- இப்பொழுது பிரிவின்றியிருக்கும் யானும் நீயும் ஒருவரையொருவர் எவ்வாறு முன்பு அறிந்தோம்?
- இம்மூன்றும் இல்லையாகவும் செம்மண் நிலத்தின்கண்ணே பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை யடைதல் போல அன்புடைய நம் நெஞ்சம் தாமாகவே ஒன்றுபட்டன.

குறுந்தொகை - 5

- ஐய! என் தோழியாகிய தலைவி வேம்பினது பசிய காயை முன்பு தந்தால் இனிய பொலிவுபெற்ற வெல்லக்கட்டி என்று பாராட்டிக் கூறினீர்;
- இப்பொழுது பாரி யென்னும் வள்ளலுக்குரிய பறம்பென்னும் மலையிடத்திலுள்ள
- தை மாதத்திற் குளிர்ந்தனவாகிய குளிர்ச்சியையுடைய சுனையிலுள்ள
- தெளிந்த நீரைத் தந்தாலும் வெப்பத்தையுடையனவாகி உவர்ப்புச் சுவையைத்தருமென்று கூறினீர்; நுமது அன்பின் பகுதி அத்தகையது.

DR.D.DON STONY